


அமைச்சர்கள் கே.என்.நேரு மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (07.10.2025) சென்னை, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், கொசு மருந்து தெளிப்பு வாகனங்களின் அணிவகுப்பினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். உடன் அரசு முதன்மைச் செயலாளர்கள் முனைவர் ப.செந்தில்குமார், முனைவர் தா.கார்த்திகேயன், முக்கிய சேவை துறைகளின் இயக்குநர்கள், அனைத்து மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், இணை இயக்குநர்கள், மாவட்ட சுகாதார உயரலுவலர்கள், மருத்துவத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற தமிழால் முடியும் வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சியை மைலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தலைமையுரையாற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். உடன் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் ஔவை அருள், கல்லூரி செயலாளர்ராஜீவ் குமார் ராஜேந்திரன், கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசுஉள்ளிட்டோர் உள்ளனர்.

## வடகிழக்குப் பருவ மழை –

# முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து சேவைத் துறைகளுடன் கலந்தாலோசனைக் கூட்டம்!

### அமைச்சர்கள் கே.என்.நேரு – மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக்.08-

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் கு மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறைஅமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் நேற்று (07.10.2025) சென்னை தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு முழுவதும் உள்ள மருத்துவத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் முக்கிய சேவை துறைகள் அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டத்தில் புகை மருந்து தெளிப்பிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய பதாகைகளை வெளியிட்டு, தமிழ்நாடு நுண்ணுயிர் எதிர்ப்பு மற்றும்மேற்பார்வை வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய கையேட்டினை வெளியிட்டு கருத்துரை வழங்கினார்கள்.

இதில் அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை போன்ற முக்கிய சேவை துறைகள் வாயிலாக விரிவான ஆலோசனைக் கூட்டம் வடகிழக்கு பருவமழையின் காரணமாக மக்களுக்கு எந்தவித பாதிப்புகளும் இல்லாத வகையில் அதாவது கொசுக்கள் பாதிப்பு மற்றும் மழைக்கால நோய் பாதிப்புகளிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு இந்த கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தின் மூலம் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் வழங்கப்படும் நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்திருக்கிறோம். இந்த கூட்டத்தின் மூலம் மக்களுக்கு பெரும் அளவில் பயன்தரும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழைக்கு முன்னால் மழை பாதிப்புகளிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை போன்ற பல்வேறு சேவை துறைகள் ஒருங்கிணைந்து நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வடகிழக்கு பருவமழைகளுக்கு முன்னாள் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

அந்த வகையில் இன்றைக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் பங்கேற்க இந்தக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேலும் பல்வேறு துறையின் செயலாளர்கள் அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழையினால் ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து கலந்தாலோசனை செய்யப்படுகிறது. இக்கூட்டத்தில் மாவட்ட அளவிலான அலுவலர்கள் கூட்டங்களை நடத்தி அந்தந்த மாவட்ட அளவில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்கு கீழ் பணிபுரியும் அலுவலர்களுக்கு முக்கிய அறிவுறுத்தல்கள் மேற்கொள்ள உள்ளார்கள். கடந்த காலங்களில் மழை வெள்ளப் பாதிப்பு என்

**டெங்கு பாதிப்பு தொடர்பான கேள்விக்கு**

மழைக்காலங்களில் வீடுகளைச் சுற்றி தேங்கி இருக்கின்ற மழைநீரினால் கொசுக்கள் உற்பத்தி ஆகின்றது. ஏடிஸ் என்கின்ற கொசுக்களை தடுப்பதற்குரிய முயற்சியாக சேவை துறைகள் ஒருங்கிணைத்து வீடு வீடாக சென்று மழைநீர் தேங்கி இருக்கின்ற பகுதிகளை கண்டறிந்து தூய்மைப்படுத்தி வருகிறார்கள்.

மேலும் கொசு மருந்து அடித்தல், மருந்து தெளித்தல் போன்ற பல்வேறு பணிகளை சம்மந்தப்பட்ட துறைகள் செய்து வருகிறார்கள். இந்த ஆண்டு இதுவரை 15,796 டெங்கு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கிறது. இந்த பாதிப்புகள் ஏற்பட்டாலும் இறப்பை பொறுத்தவரை 8 என்கின்ற அளவில் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இந்த இறப்பும் இணை பாதிப்புகள் உள்ளவர்களால் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் டெங்கு பாதிப்பு தற்போது கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர் ஆர்.லால்வேனா, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திருமதி.எம்.விஜயலட்சுமி, பள்ளிக்கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர் சந்திரமோகன், நகராட்சி நிர்வாகத்துறை ஆணையாளர் மற்றும் இயக்குநர் மதுசூதன் ரெட்டி, தேசிய சுகாதார குழுமம் குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் வினித், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் நிர்வாக இயக்குநர் வினய், ஊராட்சி மற்றும் பேரூராட்சித்துறை இயக்குநர் எம்.பிரதீப் குமார் , சென்னை தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் மேலாண்மை இயக்குநர் மரு. ஜி.எஸ்.சமீரன், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (சுகாதாரம்) ஜெயசீலன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சுகந்தி இராஜகுமாரி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா மற்றும்அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்கள், இணை இயக்குநர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள், நகர நல அலுவலர்கள் மற்றும் அனைத்து சேவைத்துறை உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மயிலத்தில் ‘தமிழால் முடியும்’ வாழ்க்கை வழிகாட்டி பயிற்சி மையம்!

# உலகளவில் தமிழ் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ளது!

### பொம்மபுரம் ஆதீனம் ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் பேச்சு!

மயிலம், அக். 8-

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம் மயிலத்திலுள்ள ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரியில் தமிழால் முடியும் வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி நிகழ்ச்சி மூன்று நாட்கள் நடைபெறுகிறது.

முதல்நாள் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கல்லூரி செயலாளர் கேப்டன் ராஜீவ் குமார் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்தலைமை தாங்கி தமிழால் முடியும் வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சியை தொடங்கி வைத்தார்.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் ஔவை அருள் நோக்க உரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் தலைமை வகித்து, மயிலம் பொம்மபுர ஆதீனம் பேசுகையில்

மேலைநாடுகளில் பல்வேறு மொழிகள் இருந்தாலும் அவர்கள்தங்கள்தாய்மொழியில் தான் பேசுகின்றனர். அவ்வாறு பேசுவதற்குத்தான் விரும்புகின்றனர். அந்த வகையில் தமிழகத்தில் நாம் சிறப்பாக இருக்கிறோம். வெளிநாடுகளுக்கு போகும் போதுதான் மொழியின் சிறப்புதெரிகிறது.

அவரவர் அவரவர் மொழியில் பேச வேண்டும், தமிழர் என்றால் தமிழில்தான் பேச வேண்டும். மேடையில் பேசும் போது முழுக்க தமிழில்தான் பேசவேண்டும். எக்காரணம் கொண்டும் ஆங்கிலமோ, ஹந்தியோ என பிற மொழிகளின் கலப்படம் இருக்கக் கூடாது. தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துங்கள்.

30 ஆண்டுகளுக்கு முன்பு பேச்சில் நாம் பயன்படுத்தப்பட்ட சொற்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிட்டன. ஆங்கிலம் போன்ற அயல்மொழிகளின் தாக்கம் வந்த பிறகு படிப்பவர்களுக்கு மட்டும்தான் தெரியும், படிக்காதவர்களுக்கு குறிப்பிட்ட தமிழ்ச்சொற்கள் மறைந்துவிடும் என்ற நிலை உருவாகியுள்ளது. எனவே தமிழ்மொழியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

தமிழ் படித்தால் தமிழகத்தில் மட்டும்தான் இருப்போம் என்ற நினைக்க வேண்டாம். உலகளவில் தமிழ் படித்தவர்களுக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன. தமிழுக்காக பல நாடுகள் மரியாதை கொடுக்கின்றன. தமிழில் இல்லாதது எதுவும் கிடையாது. பல நூல்களைப் படிக்கும் போது தமிழின் சிறப்புகள் தெரிய வரும் என்றார் ஆதீனம் சுவாமிகள்.

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஔவை அருள் பேசுகையில்: மதுரை, சென்னை, கள்ளக்குறிச்சியைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம், மயிலத்தில் தமிழால் முடியும் வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி தமிழ் வளர்ச்சித்துறையால்நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியில் ஊடகத் தமிழ், கணினித் தமிழ், போட்டித் தேர்வுகளில் தமிழ் ஆகிய தலைப்புகளில் 3 நாள்களில் 24 பேர் பங்கேற்று பேச உள்ளனர்.

தமிழ் மொழியில் படிப்பதால் நிறைய பலன்கள் உள்ளன. தாய்மொழியில் நீங்கள் நன்றாக தேர்ச்சி பெற்றுவிட்டால் உங்களுக்கு எந்த மொழிக்கும் சிக்கல் இல்லை. தாய்மொழியில் நன்றாக தேர்ந்து விட்டீர்கள் என்றால் மற்ற மொழிகள் மீது வெறுப்பு வராது. இதுதான் தாய்மொழிக் கல்வியின் மிகப் பெரிய வெற்றியாகும்.

தமிழகத்தில் இளங்கலை, முதுகலைத்தமிழ் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக தமிழ் வளர்ச்சித்துறையில் உதவி இயக்குநர் பணியிடத்துக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளங்கலை, முதுகலைத்தமிழ் படித்தவர்கள் மட்டும்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். இதன் மூலம் அண்மையில் 13 பேர் நேரடியாக உதவி இயக்குநர் நிலையை அடைந்திருக்கின்றனர்.

ஒரு காலத்தில் கணினியில் தட்டச்சு என்பதே அரிதான ஒன்றாக இருந்தது. ஆனால், இன்றைய நிலையில் கணினிக் கல்வி தற்போது பெரும் மாற்றம் அடைந்திருக்கிறது. நாம் சொல்ல சொல்ல கைப்பேசியில் தட்டச்சு செய்கின்ற நிலை உருவாகியுள்ளது. அதை சொல்வதற்குத் நமக்கு தமிழ் தெரிந்திருக்க வேண்டும். அதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இந்த வழிகாட்டி நிகழ்ச்சி நடத்தப்படுகிறது என்றார் ஔவை அருள்.

தொடர்ந்து நடைபெற்ற அமர்வுகளில் தமிழ் செய்தி ஊடகங்கள், தமிழ் விக்கிபீடியா, அறநூல்கள், தமிழும் ஊடகமும், தமிழ் எழுத்துருக்கள், தமிழக வரலாறும்}பண்பாடும், ஊடகங்களில் தமிழ்மொழிப் பயன்பாடு, கணினித் தமிழ் பயன்பாடுகள் ஆகிய தலைப்புகளில் வேதவள்ளிஜெகதீசன், ஞான. செல்வகணபதி, கரும்பாயிரம், மோகன்ராஜ் பழனி, துரை. மணிகண்டன், குணசேகர், சிவசுப்பிரமணியன், இளங்கோவன் ஆகியோர் பேசினர்.

மாவட்டத்துக்கு 6 பேர் வீதம் 38 மாவட்டங்களிலிருந்து 200 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்றுள்ளனர்.

தமிழ் வளர்ச்சித்துறை துணை இயக்குநர் சத்தியபிரியா மற்றும் உதவி இயக்குநர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் சதீஷ் நன்றி கூறினார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 230 வது நாள்!

### துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை, அக்.8-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 230 ஆம் நாளான - கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (07.10.2025), துறைமுகம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 55அ, அம்மன் கோவில்தெரு, சடையப்பன் தெரு சந்திப்பு. 2) துறைமுகம் மேற்கு பகுதி

2) வட்டம் 57 அ, N.S.C.போஸ் சாலை, பத்ரியன் தெரு சந்திப்பு (பூக்கடை பஜார் அருகில்) சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட். ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல். சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல். சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி. விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




பல்லாவரம் சட்டமன்ற தொகுதி குரோம்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனை சார்பாக உடல் நலம் காக்க உடற்பயிற்சிகள் மேற்கொள்ளது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த மாபெரும் வாக்கத்தானா நடைபெற்றது இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி கலந்து கொண்டு வாக்கத்தானாவை துவக்கி வைத்து தானும் கலந்து கொண்டார். தனியார் மருத்துவமனை உரிமையாளர் டாக்டர் முத்துக்குமார் மற்றும் குழந்தைகள் பெரியோர்கள் என குடும்ப குடும்பமாக 5000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

## கழக அரசின் சீரிய நடவடிக்கைகளால் முன்னெப்போதும் இல்லாத வகையில்

## 2025–ல் குறுவைப் பருவத்தில் 6.13 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி!

# குறுவை - சம்பா - தாழை பருவங்களில் நெல் சாகுபடிக்கான முன்னேற்பாடுகள்!

### வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விளக்கமான அறிக்கை!

சென்னை, அக்.8-

குறுவை - சம்பா - தாழை பருவங்களில் நெல் சாகுபடிக்காக கழக அரசு மேற்கொண்டு வரும் விரிவான முன்னேற்பாடுகள் குறித்து வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விளக்கமான அறிக்கை விடுத்துள்ளார்.



2025-26ஆம் ஆண்டு குறுவை, சம்பா மற்றும் தாளடி பருவங்களில் நெல் சாகுபடி குறித்து வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கை வருமாறு:

2021ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்துவருகிறது. வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளின் நலன் காக்கவும், அவர்களின் பொருளாதாரம் மேம்படவும் எண்ணற்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கவும், வேளாண்விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்தவும் தமிழ்நாடு அரசு பல்வேறு மானியங்கள் வழங்குவதுடன், சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்களான விதைகள், உரங்கள், உயிர் உரங்கள், பயிர்பாதுகாப்பு மருந்துகள் தங்குதடையின்றி உரிய காலத்தில் கிடைத்திடவும் உறுதி செய்கிறது.

இதன் அடிப்படையில், நெல் சாகுபடி அதிக பரப்பில் மேற்கொண்டு, உற்பத்தியை அதிகரித்திட, ஒவ்வொரு ஆண்டும் குறுவை சிறப்புத்தொகுப்புத் திட்டம் செயல்படுத்தியது போன்றே நடப்பு ஆண்டிலும் ”குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம்” 82 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், தமிழ்நாட்டில் முதன்முறையாக கார்/ குறுவை/சொர்ணவாரி பருவத்திற்கான ”சிறப்புத் தொகுப்புத் திட்டம்” 132 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மேலும், டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி அதிக பரப்பில் மேற்கொள்ள மேட்டூர் அணை பாசனத்திற்காக ஜூன் 12ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ்நாடு எடுத்த சீரிய நடவடிக்கைகளால் முன் எப்போதும் இல்லாத வகையில் 2025ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் 6.13 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 2024ஆம் ஆண்டை விட 2.25 இலட்சம் ஏக்கர் அதிகமாகும்.

இந்நிலையில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறுவை நெல் சாகுபடி பரப்பு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளதால், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் குறுவை நெல் வரத்து மிகஅதிகமாக உயரும் என்பதால் 02.10.2025 அன்று நெல் கொள்முதலுக்கான முன்னேற்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளிக் காட்சி வாயிலாக ஆய்வு செய்தார்கள்.

தற்போது, டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் அறுவடை முழுவீச்சில் நடைபெறுவதால், சம்பா நெற்பயிர் சாகுபடி அடுத்த பத்து தினங்களில் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுநாள் வரை, சம்பா பருவ நெற்பயிர் சாகுபடி 2.64 இலட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே வேளையில் 5.50 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆண்டு, குறுவை பருவத்தில் அதிகப்பரப்பில் நெல்சாகுபடி மேற்கொள்ளப்பட்டதாலும், சாதகமான சூழ்நிலை நிலவியதால் இயல்பாக சம்பா பருவ நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், குறுவை சாகுபடி மேற்கொண்டதாலும், தற்போதுவரை குறுவை நெல் அறுவடை 52 சதவீதம் மட்டுமே செய்யப்பட்டிருப்பதாலும், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தொடர் மழை இருப்பதாலும் சம்பா நெல் சாகுபடி தாமதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனினும், டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பரப்பான 6.13 இலட்சம் ஏக்கரில் 80 சதவீத பரப்பில் அதாவது சுமார் 5 இலட்சம் ஏக்கரில் தாளடி பருவ நெல் சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தற்போது 5,438 ஏக்கரில் நெல் நாற்றங்கால் தயார் நிலையில் உள்ளதாலும், மேட்டூர் அணையில் பாசனத்திற்கு போதிய நீர் இருப்பு (83.14 டி.எம்.சி) உள்ளதாலும், வடகிழக்கு பருவமழை பரவலாக பல்வேறு பகுதிகளில் பெய்துவருவதாலும், மத்திய மற்றும் நீண்டகால நெல் இரக விதைகள், போதுமான அளவில் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு உள்ளதாலும், சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி இயல்பு பரப்பான 13 இலட்சம் ஏக்கருக்கும் கூடுதலாக மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ளவிருக்கும் விவசாயிகள் அனைவரும் தங்களது வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை தொடர்பு கொள்ளுமாறும், விதை தேவைக்கு அருகாமையிலுள்ள வேளாண் விரிவாக்க மையத்தை அணுகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி திருத்தணி மேற்கு ஒன்றியம் அகூர் ஊராட்சியில் உள்ள தனியார் பள்ளியில் நடைபெற்ற நலன் காக்கும் ஸ்டாலின் முகாமை மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. துவக்கி வைத்து தமிழ்நாடு தூய்மை பணியாளர்களுக்கு நல வாரிய அடையாள அட்டை மாற்றுத்திறனாளிகள் நலத்திட்ட உதவிகள் கர்ப்பிணி பெண்களுக்கு அரசு ஊட்டச்சத்தும் மற்றும் சுகாதார பொருட்கள் அடங்கிய தொகுப்புகள் முதலமைச்சர் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை உள்ளிட்டவை வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் என். கிருஷ்ணன், மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்பட பலர் உள்ளனர்.